

புதுடெல்லி சாணக்யபுரி தமிழ்நாடு இல்ல வளாகத்தில், நேற்று (30.10.2025) அமைச்சர் எ.வ.வேலு புதியதாக கட்டப்பட்டு வரும் வைகை இல்ல கட்டுமானப் பணியின் முன்னேற்றம் குறித்து, ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, தமிழ்நாடு அரசின் புதுடில்லிக்கான சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தமிழ்நாடு இல்ல உள்ளுறை ஆணையாளர் ஆசிஷ்குமார், முதன்மைத் தலைமைப் பொறியாளர் எஸ். மணிவண்ணன், தலைமைப் பொறியாளர் எஸ்.மணிகண்டன் மற்றும் பொதுப்பணித்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி நேற்று (30.10.2025) சென்னை வர்த்தக மையத்தில் ஒன்றிய நுகர்வோர் பாதுகாப்பு, உணவு, பொது விநியோகத் திட்டம் மற்றும் புதிய, புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷியைச் சந்தித்து தமிழ்நாட்டில் நெல் ஈரப்பதத்தை 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக உயர்த்தி கொள்முதல் செய்திட அனுமதி மற்றும் செறிவூட்டப்பட்ட அரிசியைச் சோதனை செய்து, தரச் சான்றினை விரைந்து வழங்கிட ஆவன செய்திடவும் கோரிக்கை மனுவினை வழங்கினார். இந்நிகழ்வின் போது துறை முதன்மை செயலர் சத்ய பிரத சாகு, வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் முனைவர் ஆ. அண்ணாதுரை, துறை இயக்குநர் க. சிவராக, மற்றும் ஒன்றிய அரசின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### புதுடெல்லி தமிழ்நாடு இல்ல வளாகத்தில்

# புதியதாக கட்டப்பட்டு வரும் வைகை இல்ல கட்டுமானப் பணி!

## அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

புதுடெல்லி, அக்.31-

புதுடெல்லி சாணக்யபுரி தமிழ்நாடு இல்ல வளாகத்தில், புதியதாக கட்டப்பட்டு வரும் வைகை இல்ல கட்டுமானப் பணியின் முன்னேற்றம் குறித்து, பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, புதுடெல்லி, சாணக்யபுரி, கவுடில்யமார்கில் அமைந்துள்ள வைகை தமிழ்நாடு இல்லத்தினை முழுவதுமாக இடித்துவிட்டு, நவீன வசதிகளுடன் புதிய கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நேற்று (30.10.2025), பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, தமிழ்நாடு அரசின் புதுடெல்லிக்கான சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தமிழ்நாடு இல்ல உள்ளுறை ஆணையாளர் ஆசிஷ்குமார், முதன்மைத் தலைமைப் பொறியாளர் எஸ். மணிவண்ணன், தலைமைப் பொறியாளர் (சென்னை மண்டலம்) எஸ்.மணிகண்டன் மற்றும் பொதுப்பணித் துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

### மாநிலம் முழுவதும் உள்ள பயனாளிகளுக்கு

# கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டைகள்!

## 2 மாத காலத்திற்கு நீட்டிப்பு! அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!



சென்னை, அக்.31-

முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில், மாற்றுத்திறனாளிகள், கண்பார்வை குறைபாடு உள்ளவர்கள், அறிவு சார் திறன் குறைபாடு உள்ளவர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், தமிழறிஞர்கள் மற்றும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் உள்ளிட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டைகளை இணை யதளம் வாயிலாக (Online) பெற்றிடும் வகையில், 07.09.2023 முதல் முதற்கட்டமாக சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக த்தில், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

மாநிலம் முழுவதும் உள்ள பயனாளிகள் அனைவரும் கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை இணையதளம் வழியாக உடனுக்குடன் பெறுகின்ற வசதியினை அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் நடைமுறைப் படுத்த தேவையான மென்பொருள் உருவாக்கம் உள்ளிட்ட பணிகள், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNEGA) வழியாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறையுடன் இணைந்து இறுதி கட்டப் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது. இதனை முழுமையாக செயல்படுத்த, மாவட்ட அளவில் முகாம்கள் நடத்த வேண்டி உள்ளதால், ஏற்கனவே பயனாளிகள் பயன்படுத்தி வரும் 31/10/2025 வரை செல்லத்தக்க கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை, 31/12/2025 வரை மேலும் இரண்டு மாத காலத்திற்கு நீட்டித்து பயணிகள் சிரமமின்றி பயணம் செய்யலாம் என போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற நிகழ்வில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் வழங்கப்பட்டு வரும் கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை பயனாளிகள் இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து, பெற்றிட வழிவகை செய்யப்படும் என அறிவித்ததன் அடிப்படையில், இத்திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு பயணியர் மற்றும் பொருள் போக்குவரத்துக் கழகம் (TNMLC) தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) நிறுவனத்துடன் இணைந்து, மாற்றுத்திறனாளிகள், கண்பார்வை குறைபாடு உள்ளவர்கள், அறிவு சார் திறன் குறைபாடு உள்ளவர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், தமிழறிஞர்கள் மற்றும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் உள்ளிட்ட பயனாளிகளுக்கு இணையதளம் வாயிலாக கட்டணமில்லா பயண அட்டைகளை பெறும் வசதி, முதற்கட்ட மாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் 07.09.2023 அன்று முதல் அமல்படுத்தப்பட்டது.

பயனாளிகள், இத்திட்டத்தின் வாயிலாக எவ்வித சிரமுமின்றி தங்களது இருப்பிடத்திற்கு அருகாமையில் உள்ள அரசு இசேவை மையம் அல்லது https://www.tnesevai.tn.gov.in/ என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 2025 26 ஆம் நிதி ஆண்டில் இணையதளம் வாயிலாக பேருந்து பயண அட்டையை புதுப்பிக்க ஏதுவாகவும், இவ்வசதியினை அனைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் (விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர், கும்பகோணம், மதுரை மற்றும் திருநெல்வேலி) விரிவுபடுத்தி, புதியதாக பயண அட்டையை பயனாளிகளுக்கு வழங்கவும், உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

இதனை செயல்படுத்த மாவட்ட அளவில் முகாம்கள் நடத்த வேண்டி உள்ளதால், ஏற்கனவே பயனாளிகள் பயன்படுத்தி வரும் 31/10/2025 வரை செல்லத்தக்க கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை, 31/12/2025 வரை மேலும் இரண்டு மாத காலத்திற்கு நீட்டித்து அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்யும் வகையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்!

# குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க செயற்குழுக் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், அக்.31

குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ. மனோகரன் விடுத்துள்ள வேண்டு கோள் வருமாறு:

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க செயற்குழு கூட்டம் 01.11.2025 சனிக்கிழமை அன்று மாலை 04.00 மணியளவில் படப்பை சி.என்.சி. மஹாலில் எனது ( ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ. மனோகரன் ) தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் குறுசிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்.

திருப்பெரும்புதூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஒன்றிய குழுத்தலைவர் திருமதி. சரஸ்வதி மனோகரன், மத்திய ஒன்றியப் பொறுப்பாளர் திருமுடிவாக்கம் ஏ.மணி, வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தே மா தரம், ஒன்றியக் குழு துணைத் தலைவர் திருமதி உமாமகேஸ்வரி வந்தேமாதரம், ஒன்றியக் கழக பொறுப்புக்குழு உறுப்பினர்கள் வ.நந்தகோபால், சி.பார்த்தசா ரதி, மூ.ராஜேந்திரன், எஸ்.கர்ணன், குமுதா, சுமன், டி.லோகநாதன், த.ஏழுமலை, என்.வாசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பாகநிலை முகவர்கள் (BLA2), பாக டிஜிட்டல் முகவர்கள் (BDA), உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மற்றும் சிறப்பு அழைப்பாளர் கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி கேட்டு க்கொள்கிறேன்.

பொருள்: என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பாக வாரியாக பரப்புரைக் கூட்டம், SIR வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், நவம்பர்27 துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழா,2026 தேர்தல்.

குறிப்பு: மாவட்டக் கழகத்தால் வழங்கப்பட்ட வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் கணக்கெடுக்கும் புத்தகத்தினை பாகநிலை முகவர் (BLA2) கூட்டத்திற்கு வரும்போது அவசியம் கொண்டு வர வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. அமோக வெற்றி பெற்று

# மு.க ஸ்டாலின் மீண்டும் முதல்வராக அமர பாடுபட வேண்டும்!

## ஆலோசனைக் கூட்டத்தில் – அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் சிறப்புரை!



திருவள்ளூர் அக் 31;

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

திருவள்ளூர் மத்திய மாவட்ட அவைத்தலைவர் மா.ராஜி தலைமை தங்கினார் பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜே.ரமேஷ், மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் சி. ஜெரால்டு, மாவட்ட துணை செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், கு.விமல்வர்ஷன், வி.குமார், ஜெ.மகாதேவன், எஸ்.காஞ்சனா சுதாகர், எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய செயலாளர் ஆர். ஜெயசீலன் அனைவரையும் வரவேற்றார்.

இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்கி சிறப்புரையற்றினார்.

இந்த கூட்டத்தில் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் பேசும் போது, திமுக தலைவர் அறிவிப்பின்படி என் வாக்கு சாவடி வெற்றி வாக்கு சாவடி என்பதை வலியுறுத்தும் வகையில் இந்த கூட்டம் நடைபெறுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 68 ஆயிரம் வாக்கு சாவடிக்களிலும் இலக்கு நிர்ணயித்து வெற்றி பெறுவதே இந்த திட்டத்தின் நோக்கம் ஆகும்.

எஸ் ஐ ஆர் எனப்படும் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப்பட்டியலுக்கு வாக்கு சாவடி அளவில் தயார் படுத்துவதும் விவரங்களை சேகரிக்க வேண்டும்.

வருகிற நவம்பர் 1 முதல் டிசம்பர் 10 வரை 40 நாட்கள் பாகம் வாரியாக கூட்டம் நடத்திட வேண்டும். பி.எல்.ஏ 2, பி.டி.ஏ அனைத்து பி.எல்சி மற்றும் வாக்குச்சாவடிக் குட்பட்ட மாநில மாவட்ட ஒன்றிய பகுதி நகர பேரர வாடு கிளைக் கழக நிர்வாகிகள் சார்பு அணிவினர் அனைவரையும் கட்டாயம் இந்த கூட்டத்திற்கு அழைக்க வேண்டும்.

2021 சட்டமன்ற தேர்தலில் ஒரு பாகத்தில் 500 வாக்குகள் பெற்றிருப்பின் வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் கூடுதலாக எழுவது வாக்குகள் பெற்று 570 வாக்குகளாக நிர்ணயித்து செயல்பட வேண்டும்.

2026 தேர்தல் நாள் வரைக்கும் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வாக்குச் சாவடிகளில் கூடுதல் கவனம் செலுத்தி வெற்றியை உறுதி செய்திட வேண்டும். இந்த வாக்கு சாவடிகளில் ஊரணியில் தமிழ்நாடு எங்க திட்டத்தின் மூலம் இணைந்தவர்கள் உள்ளிட்ட குறைந்தது 100 பேர்களை அழைத்து தெரு முனை கூட்டம் நடத்திட வேண்டும்.

அப்போது கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை திருவள்ளூர் மத்திய மாவட்டம் உட்பட்ட மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழகங்களில் உள்ள வார்டு கிளை மற்றும் பகுதிகளில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அறுசுவை உணவு ரத்த தான முகாம் மருத்துவ முகாம் கண் சிகிச்சை முகாம் குழந்தைகள் காப்பகம் முதியோர் இல்லம் மாற்றுத்திறனாளி மனநிலை பாதிக்கப்பட்ட காப்பகங்கள் மற்றும் ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி கழக இரு வண்ணம் கொடி மற்றும் தோரணைகள் அமைத்து சிறப்பாக கொண்டாடிட வேண்டுமென்றும் அறிவுறித்தினார்.

ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒரு புதிய வாட்ஸ் அப் குழுவை வாக்குச்சாவடிக்கான பி.டி.ஏ உருவாக்க வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று குடும்ப உறுப்பினர்கள் விவரங்களை குறித்துக் கொள்ள வேண்டும். அரசின் சாதனைகளை விளக்கும் துண்டு அறிக்கையை கொடுத்து வீட்டில் உள்ள அரசு திட்டங்களின் பயனாளிகள் விவரம் மற்றும் தேவைகள் ஏதேனும் இருப்பின் அதனை குறித்துக் கொள்ள வேண்டும்.

18 வயது பூர்த்தி அடைந்தவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது, இறந்தவர்களை பட்டியலில் இருந்து நீக்குவது, மற்றும் முகவரி மாற்றம் செய்து வந்தவர்களை சேர்ப்பது இங்கிருந்து சென்றவர்களை நீக்குவது போன்ற செயல்களிலும் கவனமாக செயல்பட வேண்டும்.

தகுதியுள்ள எந்த வாக்காளர் பெயரும் வாக்காளர் பட்டியலில் விடுபடாமல் பார்த்துக் கொள்வதும் தகுதியற்ற எந்த ஒரு நபரும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று விடாமல் பார்த்துக் கொள்வதும் அடுத்த ஒரு மாதத்திற்கு காரணம் எனக்கு இலக்கு எனவும் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேசும்போது தெரிவித்தார். மேலும் வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக அமோக வெற்றி பெற்று மீண்டும் தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் அமர அனைவரும் ஒற்றுமையாக செயல்பட வேண்டும் எனவும் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் ஆவடி தொகுதி பார்வையாளர் நிவேதா ஜெசிகா, ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் சன்.பிரகாஷ், டி.தேசிங்கு, தி.வை.இரவி, என்.இ.கே.மூர்த்தி, ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, பொன்.விஜயன், பேபிசேகர், ஜி.நாராயண பிரசாத், தி.வே. முனுசாமி, டி.முரளி கிருஷ்ணன், அணிகளின் அமைப்பாளர்கள் கே.சுரேஷ் குமார், வி.தியாகராஜன், பெ. வினோத், ஒ.ஆர்.நாகூர் கனி, ஏ.ஜெ.பவுல், ஏ.ஜி.ரவி, கு.தமிழ்செல்வி, எஸ்.சௌந்தர்ராஜன், பொறியாளர் எம். மோகன், ஆர்.பிரவீன் குமார், டி.குமரேசன், எம்.இளையான், விமல் ஆனந்த், நிஜம் லிங்கம், ஆதிகேசவன், பஷீர் அகமது, என்.சன்முகம், ராஜேஷ் குமார், பா.குமரேசன், ஜி.துர்கா பிரசாத், மற்றும் அணிகளின் நிர்வாகிகள் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மாதவரம் எஸ். சுதர்சனம் முன்னிலை!

# திருவொற்றியூர் மத்திய பகுதி வட்டச் செயலாளர்கள்- பாக ஒருங்கிணைப்பாளர் கூட்டம்!

## எஸ்.மோகன் பங்கேற்பு! பகுதி செயலாளர் ஏ.வி.ஆறுமுகம் அறிக்கை

சென்னை, அக். 31 -

திருவொற்றியூர் மத்தியப் பகுதி செயலாளர் 2வது மண்டலக்குழுத் தலைவர் ஏ.வி. ஆறுமுகம் அறிக்கை வருமாறு:

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் மத்தியப்பகுதிக்குட்பட்ட வட்டக்கழக செயலாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம். மாவட்டக்கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ, முன்னிலையில் இன்று (31-10-2025 வெள்ளிக்கிழமை) மாலை 5 மணியளவில் அவைத்தலைவர் வா.முத்து சாமி தலைமையில் பகுதிக்கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இதில் மாநில வர்த்தகர் அணி துணைத்தலைவர் தொகுதி பார்வையாளர், தி.நகர் எஸ்.மோகன், பங்கேற்று ஆலோசனை வழங்குகிறார்.

அதே சமயம் வட்டக்கழக செயலாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி (SIR) சிறப்பு வாக்காளர் பட்டியல் சீர்திருத்த பணிகள் மற்றும் கழக ஆக்க பணிகள்.

மேற்கண்டவாறு திருவொற்றியூர் மத்தியப்பகுதி செயலாளர் 2வது மண்டலக் குழு தலைவர் ஏ.வி.ஆறுமுகம், தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் மேயர் ஆர்.பிரியா தலைமையில் நேற்று (30.10.2025) மாமன்றக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜை நேற்று (30.10.2025) சென்னை, நந்தனம் ஆவின் அலுவலகத்தில் தமிழ்நாடு பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் ஊழியர்கள் நலச்சங்கதின் நிர்வாகிகள் சந்தித்து தங்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றியதற்கு நன்றி தெரிவித்தனர். உடன் துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அ.ஜான் லூயிஸ், உட்பட பலர் உள்ளனர்.